Lifeline மீண்டும் வாழ்வோம்



இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 43 Pages 4 Sunday, 14 December 2008 Free Copy

இயற்கையும் இடர்தர முடிவற்றுத் தொடர்கிறது வன்னி மக்களின் துயர வாழ்வு

இலங்கையில் அண்மையில் பெய்த அடைமழையினால் 116,197 குடும்பங்களைச் சேர்ந்த 339,565 பேர் பாதிப்புற்றதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 296,671 பேர் பாதிப்புற்றுள்ளதாகவும் 12,837 வீடுகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 34,212 வீடுகள் பகுதியளவு பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 21,200 குடும்பங்கள் மழை வெள்ளத்தினால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அங்கு 1000 நிரந்தர வீடுகளும் 6000 தற் காலிகக் கூடாரங்களும் பாதிப்படைந்துள்ள தாக மனிதாபிமான பணியாளர்களை மேற் கோள்காட்டி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தற்பொழுது கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் மழையின் சேதங்கள் குறித்து மதிப்பீடுகள் இடம்பெறுகின்றன.

கடும் மழை மற்றும் பலத்த காற்று என்ப வற்றின் காரணமாக கிளிநொச்சி மாவட்டத் தில் உள்ள பெருமளவான குடிசைகள் அழி வடைந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகம் தெரிவித்தார்.



வன்னியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள அருவித் தோட்டம் சிவானந்த வித்தியாலயம். (மெனிக்பாம்)

பல குடிசைகளின் கூரைகள் சிதைந்தழிந்து போயிருப்பதாகவும் இதனால் சுமார் 6000 குடும்பங்கள் பாடசாலைகளில் தங்க வைக் கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

எனினும் கடந்த வாரம் ஆரம்பமான க.பொ.த சாதாரணத்தரப் பரீட்சை காரண மாக இவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப் பட்டதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை நிலமைகளைக் கட்டுப்பாட் டிற்குள் கொண்டு வருவதற்கு 10,000 கூடா ரங்களை அனுப்பி வைக்குமாறு அத்தியாவ சிய சேவைகள் ஆணையாளரிடம் தான் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அரசாங்க அதிபர் வேதநாயகம் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 4330 குடும்பங்களைச் சேர்ந்த 17,214 பேர் பாடசாலைகளில் தங்க வைக் கப்பட்டுள்ளனர். இவர்கள் முன்பு இடம் பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களில் வசித்து வந்தவர்கள்.

கடும் மழையினால் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் தற்போது பொதுக் கட்டிடங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். எனினும் இவர்களை அக்கட்டிடங்களிலி ருந்து வேறு குடியிருப்புகளுக்கு அனுப்ப முடியாத சூழ்நிலை நிலவுவதாக முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எமல்டா சுகுமார் தெரிவித்தார்.

மழை நீர் தற்போது வழிந்தோடும் சூழ் நிலையில் தொற்று நோய்கள் பரவும் வாய் ப்பிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். மாவட்டத்தில் மலேரியா நோயின் பரவல் தீவிரமடைவதை (3ஆம் பக்கம் பார்க்க)

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக வளிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் திமுக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநுர் எப்.எம். ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.45 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.internews.lk என்ற இணை யத் தளத்திலும் கேட்கலாம்.

சுருக்கம்

✸ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப் படையில் திரட்டப்பட்ட IASC 152ஆவது அறிக் கையின் படி இலங்கையில்17,014 குடும்பங்களைச் சேர்ந்த 58,514 பேர் (வன்னி நீங்கலாக) அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✸ வன்னியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள 400க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தற்பொழுது மெனிக்பாம் பகுதியில் தங்கவைக்கப்பட்டிருக்கின் றார்கள். இவர்களுக்கான வீட்டுத்திட்டங்கள் அமைத் துக்கொடுப்பது தொடர்பாக கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சார்ல்ஸ் தெரிவித்துள்ளார். மெனிக்பாம் பகுதி யில் 200 வீடுகளை தற்காலிகமாக அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு சுத்தம் செய்யப்பட்டிருக்கின்ற காணிப்பகுதிகளில் தற்போது வீதியமைப்பு வேலைத் திட்டங்களும் ஏனைய நட வடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றது.

✸ அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெயர்ந்திருக்கின்ற மக்கள் மத்தியில் தற்பொழு தொற்றுநோய்கள் பரவுகின்ற சந்தர்ப்பங்கள் அதிக ரித்துள்ளது. சிறுவர்களுக்கு வாந்திபேதி வயிற் றோட்டம் போன்ற நோய்கள் ஏற்பட்டிருப்பதாக வும் பெரியவர்களுக்கு மலேரியா போன்ற நோய் கள் ஏற்பட்டிருப்பதாகவும் இவற் றைக்கட்டுப்படுத் துவதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி எமல்டா சுகுமாரன் தெரிவித்துள்ளார்.

✸ சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு Child Vision நிறுவனமும் அவுஸ்திரேலிய உயர்ஸ் தானிகரலுவலகமும் அங்கவீனமுற்ற பெற்றோர்க ளின் அமைப்பும் ஒன்றிணைந்து புத்த ளம் இபுனுய துதா மண்டபத்தில் வைபவம் ஒன்றை அண்மையில் நடத்தியது. இதில் அறுநூறுக்கும் மேற்பட்ட அங்க வீன முற்றவர்கள் கலந்துகொண்டார்கள். அங்கவீன முற்றவர்களை சமூகத்தில் ஒன்றிணைத்து அவர்க ளுக்கான செயற்பாட்டை முன்னெடுப்பதே இந்த செயலமர்வின் நோக்கமென Child Vision நிறு வனத்தின் புத்தளம் திட்டப் பணிப்பாளர் ரொமேஷ் தெரிவித்தார்.



பேசும் படம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந் துள்ள புல்லுமலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் விவசாயத்தில் ஈடுபட் டுள்ளதை படத்தில் காணலாம். இங்குள்ள மக்கள் உள்நாட்டு பிரச்சினைகள் காரண மாக 2006 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் மீள்குடி யேற்றப்பட்ட இவர்கள், தமது வாழ்க் கையை விரைவில் மீளகட்டியெழுப்பு வதற்காக விவசாயம், சேனைப்பயிர்ச் செய்கை என பல்வேறு தொழில்களில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளி னால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடி யேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்திட்ட அமைப்புக் களின் ஓர் அங்கமாகும்.

புல்லுமலை மக்களின் வாழ்க்கைப் பயணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி பிரதேச செயலக பிரி வில் புல்லுமலை பிரதேசம் அமைந்துள்ளது. இப்பிரதேசம் மட்டக் களப்பு அம்பாறை நோக்கிச் செல்லும் A5 வீதி வழியே 4020 ஹெக்டேயர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பகுதி மக்கள் 1985, 1990, மற்றும் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இடம் பெயர்வுக்குட்பட்டனர். இடம் பெயர்ந்த மக்கள் சவுக்கடி, கோர லங்கேணி, களுவாங்கேணி, பலாச்சோலை ஆகிய பகுதிகளில் உள்ள பல்வேறு நலன்புரி நிலை யங்களில் இடம்பெயர்ந்த நிலை யில் வாழ்ந்தனர். மொத்தமாக 308 குடும்பங்கள் 2006ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன் னர் இக்கிராமத்தில் வாழ்ந்தனர். தற்போது 213 குடும்பங்களைச் சேர்ந்த 690 பேர் மட்டுமே மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர். இன் னும் 95 குடும்பங்களைச் சேர்ந்த 302 பேர் மீள்க்குடியேற்றப்படாத நிலையில் நலன்புரிநிலையங்களி லும் உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.



புல்லுமலைப் பிரதேசத்தில் மீளக்குடியேற்றப்பட்டுள்ள ஒரு குடும்பத்தை படத்தில் காணலாம்.

தற்போது மீளகுடியேற்ற நட வடிக்கைகள் காரணமாக தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பியுள்ள மக்கள் இடப்பெயர்வுக்கு முன்பு தங்களது ஜீவனோ பாயமாக நெற்செய்கை, கால்நடை வளர்ப்பு, விறகு வெட்டல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களை மேற்கொண்டு வந்த னர். எனினும் கடந்த கால அசாதாரண சூழ்நிலைகள் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலையை தோற்று வித்திருந்தது. தற்போது மீள்குடியேற்றத்தின் பின்னர் மக் கள் தமது சொந்த முயற்சியிலேனும் தமது வாழ்வைக்கட்டி எழுப் புவதென தீர்மானித்துள்ளனர் அதன்படி அவர்கள் தமது முயற்சி களை மேற்கொண்டு வருகின்றனர்.

37 வயதான கிருஷ்ணகுமாரி 2007 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து தற்போது மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பியுள்ளார். என்ன பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வந்தாலும் சொந்த மண் ணில் உழைத்து வாழ்வதில் தான் தனக்கு திருப்தி என்றார் அவர். அரசசார்பற்ற நிறுவனங்கள் இவருக்கு விவசாயத்திற்கான பல் வேறு உதவிகளை வழங்கி வருகின்றன.

இக்கிராமத்தில் கல்வி நட வடிக்கைகள் ஆரம்பமாகிவிட்ட போதிலும் 500 வரையான மாணவர்கள் கல்வி கற்ற பாட சாலையில் 64 மாணவர்கள் மாத் திரமே தற்போது தமது கல் வியை தொடர்கின்றனர்.

இப் பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்கள் மற்றும் தளபாடங்கள், குடிநீர் வசதிகள் உட்பட ஏனைய வசதிகள் மிகக் குறைவாக காணப்படுகின்றதாகவும், பாதுகாப்பு குறித்த அச்ச உணர்வு கல்வி நடவடிக்கைகள் பின்னடைவை ஏற்படுத்தி இருப் பதாகவும் பெரிய புல்லுமலை பாடசாலையின் அதிபர் ஸ்ரீபால் ராஜ் கூறினார்.

அதைப்போல் முகாம்களில் இருந்தபோது கிடைத்த உதவிகள் கூட தற்போது கிடைப்பதில்லை என்றும் சில மக்கள் தெரிவித்தனர்.

மீள்குடியேற்றத்தின் பின்பு கடும் போராட்டங்களின் மத்தியி லும் தமது வாழ்க்கையினை விரைவாக மீளக்கட்டியெழுப்புவதற் கான முயற்சிகளில் இம்மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டில் பிரச்சினைகள் இன்றேல் ஆறே மாதங்களில் தமது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பி விடலாம் என்ற நம்பிக்கை இந்த மக்கள் மத்தியில் காணப்படுகின்றமை பாராட்டுக்குரியதே.

சாணரம்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. 2006 ஆம் ஆண்டு இந்தப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை திருகோணமலையிலுள்ள இறால் குழி மற்றும் பள்ளிக்குடியிருப்பு பகுதியில் மீள்குடியேற்றுவதாக அரசு தெரிவித்திருக்கின்ற போதும் சம்பூர் மக்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து வருகின்றனர். இந் நிலையில் மட்டக்களப்பில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் சம்பூர் பகுதியைச் சேர்ந்த மக்களி டம் அரசாங்கம் மீள்குடியேற்றுவ தாக கூறும் இடங்களில் மீள்குடி யேற விரும்பாமைக்கான கார ணம் குறித்து கேட்டறிந்தோம்.

நபர் 1: எங்கள் ஊருக்கு அரு கில் கொண்டு சென்று எங்களைக் குடியமர்த்தினால் நாங்கள் மட் டுமே இங்கிருந்து செல்வோம். நாங்கள் சம்பூர் கிழக்குப் பகுதி யைச் சேர்ந்தவர்கள். அந்தப் பகுதியில் எங்களைக் குடியமர்த்தி னால் மேற்கு பகுதி மக்களும் எம் முடன் வந்து குடியேறலாம். அல் லது எங்களுடைய வயல்களை அண்டிய பகுதிகளில் காடுகள் இருக்கின்றன. அவ்வாறான பகுதி களில் எங்களைக் குடியமர்த்தி னால் நாங்கள் விவசாயமும் செய்து கடற்தொழிலும் செய்வ தற்கு வசதியாக இருக்கும். வேறு இடங்களில் குடியமர்த்துவார்களா னால் நாங்கள் போக மறுப்போம். ஏற்கனவே போக இயலாதென்று கடிதம் எழுதிக் கொடுத்திருக்கின் றோம். எங்களுடைய சொந்த இடம்தான் எங்களுக்கு முக்கியம்.

நபர் 2: நாங்கள் வேறு எங்கும் குடியமர மாட்டோம். எங்களை அண்டிய பகுதிகளில் உள்ள மக் களைக் குடியமர்த்தியுள்ளார்கள். அவர்கள் அனைவரும் தங்களது சொந்தக் காணிகளில் குடியமரப் போகின்றார்கள். தங்களுடைய சொந்தத் தொழில்களை அவர்கள் மேற்கொள்ளப் போகின்றார்கள். அவர்களைப் போன்று எங்களை யும் எங்களது சொந்த இடத்தில் குடியமர்த்தினால்தான் எங்களு டைய மக்களுக்கும் சந்தோசமாக இருக்கும். வேறு இடங்களுக்குச் செல்ல எம்முடைய மக்கள் விரும்பமாட்டார்கள். வேறு இடங் களில் எங்களுடைய இயல்பு வாழ்க்கை சாத்தியப்படாது. இட வசதிகள் தொழில் வசதிகள் அனைத்துமே முடக்கப்படும்.

நபர் 3: எங்களுக்கு அங்கு 10 ஏக்கர் வயல் காணி, 5 ஏக்கர் வளவு காணி, தென்னந்தோப்பு எல்லாம் இருக்கின்றது. அதை யெல்லாம் இழந்துவிட்டு நாங்கள் எவ்வாறு இவர்கள் குறிப்பிடு கின்ற காடுகளிலும் மேடுகளிலும் சென்று குடியமர முடியும்? படிக் கின்ற பிள்ளைகள் மூன்று பேர் உள்ளார்கள். மிகவும் கஷ்டத் துடன் வாழ்கின்றோம். எங்களை சொந்த இடங்களில் குடியமர்த் துங்கள். அல்லது நாங்கள் இந்த இடத்தைவிட்டு எங்கும் போக மாட்டோம்.

நபர் 4: நாங்கள் இடம் பெயர்ந்து இரண்டரை வருடங் களாகிவிட்டது. இந்த இரண்டரை வருடங்களாக கஷ்டப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம். எங்களுடைய ஊர் எப்படி இருக்கின்றது என்று கேட்டால் அது பாதுகாப்பு வலயத்தில் இருப்பதாகச் சொல்கின்றார்கள். அதனால் எங்களை அங்கு குடி யமர்த்த மாட்டார்கள் என்று வெளியில் பேசிக்கொள்கின்றார் கள். வேறு சில இடங்களில் எங் களைக் குடியமர்த்துவதாகச் சொல் லியிருக்கின்றார்கள். ஆனால் நாங்கள் அங்கு செல்ல விரும்ப வில்லை.

வாழ்வின் வர்ணங்கள்



2006இல் மட்டக்களப்பின் கிரான் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து உற்றார் உறவினர்க ளது வீட்டில் தங்கியிருந்த 300 குடும்பங்கள் அண்மையில் மீள் குடியேற்றப்பட்டனர். அவ்வாறு தனது சொந்த இடத்திற்கு செல் வதற்காக தயாராகிக்கொண்டி ருந்த தடானையைச் சேர்ந்த கோபாலப்பிள்ளை ரத்தினம் மாள் தனது எண்ணங்களை பகிர்ந்துகொண்டார்

'நாங்கள் 2006ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 26ஆம் திகதி இடம்பெயர்ந்து இங்கு வந்து உற்றார் உறவினர் வீட்டில் தான் இருந்தோம். இப்போதுதான் எங்களை மீள்குடியேற் றம் செய்யப் போகின்றார்கள். அதனால் நாங்கள் எங்கள் சொந்த ஊருக்குச் செல்லப்போகின்றோம். எங்கள் சொந்த ஊரில் குடியேற வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். அங்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லாமல் நாங்கள் எங் கள் தொழில்களை மேற்கொண்டு வாழ வேண்டும். யாரே னும் உதவி செய்தால், கொட்டில் அமைத்துதான் நாங்கள் குடியிருக்க வேண்டும். தடானை, ஈச்சையடி, பலத்தசேனை என்ற சில கிராமங்கள் இருக்கின்றன. அங்கு சென்றுதான் நாங்கள் குடியிருக்க வேண்டும். அங்கு எங்களுக்கு வீடு வாசல் இருக்காது. நாங்கள் வெள்ளாண்மை, சேனைத் தொழில் செய்தோம். ஆனால் எவ்வித தொழிலும் இல்லா மல் கூலித் தொழிலும் செய்ய முடியாமல்தான் உற்றார் உற வினர்களின் வீடுகளில் வாழ்ந்தோம். எங்களுக்கு நிவாரண ப் பொருட்களை வழங்குகின்றார்கள். அதைக்கொண்டு தான் சாப்பிடுகின்றோம். சொந்தமான தொழில் என்பது எமக்கில்லை.'

இஸ்லாமிய, கிறிஸ்தவ அமைப்புகளின் ஒன்றிணைந்த செயல்பாடு

அது 2006ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு அமைப்பினால் (CHA) கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் ஒன்றில் ஓர் அவசர உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அமைந்தது. இஸ்லாமிய அபிவிருத்தி மற்றும் நிவாரண நிறுவனமான முஸ்லிம் உதவி அமைப் பின் இயக்குனர் அம்ஜட் சலீம் என்பவர் கலந்துகொண்டார்.

அவர் கலந்து கொண்ட அந்த கூட்டம் நடைபெறுவதற்கு ஒரு சில தினங்கள் முன்னதாக திருகோணமலையின் மூதூர் பகுதியில் இலங்கை அரச படைத்தரப்பினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பாரிய மோதல் ஏற்பட்டது. இதனால் 50,000 பேருக்கும் அதிகமான மக்கள் அந்த பகுதிகளில் இருந்து இடம் பெயர நேரிட்டது

ஜரின் இணையத்திற்கு சலீம் கருத்துத் தெரிவிக்கையில், தாங்கள் மூதூர் பகுதியில் இருந்துள்ளதாகவும் அதனால் அங்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர முடிவதாகவும் கூறினார். CHA அமைப்பினால் ஏற்பாடு செய்யப் பட்ட அந்த சந்திப்பின் போது தமக்குள்ள அவசரத் தேவைகளை நிறைவேற்ற உதவி தேவைப்படுவதாக தான் கூறியதாகவும் சலீம் குறிப்பிட்டார். சலீமின் வேண்டு கோளை செவிமடுத்த UMCOR நிறுவனத் தின் இயக்குனர் உடனடியாக அவருக்கு உதவ உறுதியளித்தார்கள்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் பின்னர் இலங்கையில் செயல்படத் தொடங்கிய UMCOR மற்றும் முஸ்லிம் உதவி அமைப்பு ஆகியன தனித்தனியாக தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தன. எனினும் சலீமின் வேண்டுகோளை அடுத்து ஏற்பாட்டுள்ள புதிய மாற்றம் இரு அமைப்புகளும் ஒன்றிணைந்து செயலாற்றும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

புதிய ஒருங்கிணைவு

மூதூருக்கு மேற்காக 40 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள கந்தளாய் என்னும் பகுதியில் அவர்கள் ஒன்றாக இணைந்து பணிகளை ஆரம்பித்தார்கள். அங்கு பத்தாயிரத்துக்கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்தனர்.

அந்த மக்களுக்குத் தேவைப்படும் முதலுதவி, மருந்துப்பொருட்கள், பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகவீனமுற்றவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல போக்குவரத்து வசதி போன்ற வற்றை வழங்கினார்கள்.

அதன் பின்னர் அந்த இரு நிறுவனமும் இணைந்து தம்மிட மிருந்த வழங்களையும் பணியாளர்களையும் ஒன்றிணைத்து இடம் பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்



UMCOR அமைப்பும் முஸ்லிம் உதவி அமைப்பும் நிவாரண விநியோக நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.

புவதற்கும் சேத மடைந்த வீடுகளை திருத்தி அமைப்பதற்கும் வேண்டிய ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

தமது நிறுவனம் களஞ்சியசாலையை எற்படுத்தி இடம் பெயர்ந்த மக்களுக்கான உதவிப் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்த வேளை UMCOR நிறுவனம் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருட்களை கொள்வனவு செய்து வழங்கியதாக சலீம் குறிப்பிட்டார்

UMCOR நிறுவனமானது அமெரிக் காவை தளமாகக் கொண்டு செயல்படும் ஐக்கிய மெதடிஸ்ட் திருச்சபையின் மனிதாபிமான செயல் திட்டங்களை முன்னெடுக்கும் பிரிவாகும். இந்த அமைப்பு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியுதவி களையும் நிவாரண உதவிகளையும் வழங்கி வருகின்றது.

முஸ்லிம் உதவி நிறுவனம் அதிக உள்ளூர் பணியாளர்களைக் கொண்டிருந்தா லும் அரச அதிகாரிகளுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்ததாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணிகளை சிறப்பான முறையில் முன்னெடுக்க முடிந்ததாக சலீம் சுட்டிக்காட்டினார்.

UMCOR நிறுவனமானது அமெரிக்காவை தளமாகக் கொண்டு செயல்படும் ஐக்கிய மெதடிஸ்ட் திருச்சபையின் மனிதாபிமான செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் பிரிவாகும்

பிரச்சினைகளை வெற்றிகொள்ளல்

இரு நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து பணியாற்றியதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண வசதிகளை அதிகரிக்க முடிந்ததாக சலீம் கூறினார்

இதேவேளை இரு வேறு மதங்களைச் சேர்ந்த அமைப்புகளின் ஒருமித்த செயல் பாடுகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிலவி வந்த பல்வேறு முரண்பாடுகளுக்குத் தீர்வினை ஏற் படுத்தியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மூதூருக்கு தெற்காக அமைந்துள்ள சேருவில்ல கிராமத்தில் பெரும்பான்மையின சிங்கள மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அந்தப் பகுதி மக்கள் ஆரம்பத்தில் வெளிநாட்டு நிவாரண உதவி நிறுவனங்கள் குறித்து கடும் போக்கினை கொண்டிருந்தனர். எனினும் இந்த இரு நிறுவனங்களும் இணைந்து அந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கிய போது அந்த மக்களின் எதிர்ப்புணர்வுகள் இல்லாது போனதாகவும் அவர் குறிப்பிட்டார்

அந்த கிராமத்து மக்கள் வெளிநாட்டு உதவி நிறுவனங்கள் மீது நம்பிக்கை கொண் டிருக்கவில்லை எனினும் முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ அமைப்புகள் இரண்டு ஒன்றிணைந்து பணியாற்றவுள்ளமை குறித்து அந்த கிராமத்தின் பௌத்த மத தலைவர்களுக்கு தாங்கள் விளக்கிக் கூறிய தாகவும் தம்மிடம் ஒழிவு மறைவான வேலைத்திட்டங்கள் இல்லை என்பதை தெளிவுபடுத்திய பின்னரே தாங்கள் அங்கு பணியாற்ற அனுமதிக்கப்பட்டதாக வும் சலீம் கூறினார்.

இலங்கையில் இந்த அமைப்புகளின் ஒன் றிணைந்த செயல்திட்டம் சர்வதேச கவனத்தை வெகுவாக ஈர்த்திருந்தது. இதன் பலனாக 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி இலண்டனில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் மூலமாக இந்த நிறுவனங்கள் உத்தியோக பூர்வமாக வேறு பகுதிகளிலும் இணைந்து செயல்பட இணக்கம் தெரிவித்துள்ளன. வறுமையினாலும் போர் மற்றும் அசாதாரண சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை, இந்தோனேசியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் அடங்கலாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க 23 மில்லியன் அமெரிக்கன் டொலர் பண உதவி இதற்கென கிடைக்கப்பெற்றுள்ளது.

மூதூரின் சூழ்நிலை நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. தனக்கு ஏற்பட்ட முதல் அனுபவம் எவ்வாறு ஒன்றாக இணைந்து செயலாற்றுவது என்பது பற்றித் தனக்கு விலை மதிக்க முடியாத பாடங்களை கற்றுக் கொடுத்தது என்றார் சலீம்.

இயற்கையும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணமுடிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்கள் காய்ச்சல், வாந்திபேதி, வயிற்நோட்டம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவசர நில மைகளினால் பல நோயாளிகள் வவுனியா வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்கு அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட் டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த வாரங்களில் வன்னியிலிருந்து வவுனியாவிற்கு வருகை தந்துள்ள 70 குடும்பங்களைச் சேர்ந்த 340 பேர் மெனிக்பாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான சமைத்த உணவு ஏனைய உதவிகள் என்பன வழங்கப்பட்டு வருவதாகவும் தனி வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸ் தெரிவித்தார்.

வன்னியில் மழையினாலும் யுத்தத்தினாலும் மக்கள் இடம்பெயர்ந்து அடிப்படை வசதிகளை இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்ற போதும் மாணவர்களின் உயர் கல்வியை தீர்மானிக்கும் முக்கியத்துவம் மிக்க கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைகள் தடை யின்றி நடைபெற்று வருவதாக வன்னி மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பசுபதி அரியரட்ணம் தெரிவித்தார்.

வன்னியில் 50 நிலையங்களில் 5500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பரீட்சை எழுதிக்கொண்டிருக்கின்றனர்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தூர இடங்களிலுள்ள மாணவர்கள் பரிட்சை நிலையங்களுக்கு அண்மையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மடு வலய பரீட்சார்த்திகள் கிளிநொச்சி வலயத்திலும், வவுனியா வடக்கு பரீட்சார்த்திகள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் தங்கவைக் கப்பட்டுள்ளனர். இவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ள மாண வர்களுக்கான அனைத்து உதவிகளையும் பாடசாலை அபி விருத்திச் சங்கங்களும் அரசசார்பற்ற அமைப்புகளும் அர சாங்க அதிபர்களும் நல்கி வருவதாக அரியரட்ணம் குறிப் பிட்டார்.

எத்தகைய இடர்கள் ஏற்படினும் தமது பிள்ளைகள் பரிட்சையை எழுத வேண்டும் என்பதில் பெற்றோர்கள் அதிக அக்கறையுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதே வேளை கள நிலைவரங்களுக்கு ஏற்ப மாணவர்கள் பரிட்சை நிலையத்திலுள்ள மேற்பார்வையாளர்களின் ஆலோசனைகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண் டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கொட்டும் மழை ஒரு புறம் மனிதாபிமான படை நட வடிக்கை மறுபுறம் என வன்னி மக்களை துரத்தும் துன்பங் கள் முடிவற்றுத் தொடர்கின்றது.

நம்பிக்கைகளை மட்டும் சொந்தமாகக் கொண்ட அந்த மக்களின் வாழ்வில் நிரந்தர அமைதிக்கான பிராத்தனை களை தவிர வேறென்ன நாம் செய்ய?

“ வெள்ளம் காரணமாக வன்னி வலயத்தில் பரீட்சாத்திகள் பலர் தமது அடையாள அட்டைகளை இழந்துள்ளனர் ”

- வவுனியா மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் பசுபதி அரியரட்ணம்

வன்னிப் பிராந்தியத்தில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலைகளுக்கு மத்தியில் 5596 மாணவர்கள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவிருப்பதாக அறிகிறோம். இது குறித்து மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்ள வவுனியா மாவட்ட மேலதிகக் கல்விப் பணிப்பாளர் பசுபதி அரியரட்ணம் அவர்களை நேர்கண்டுள்ளோம்.

வன்னியில் எத்தனை மாணவர்கள் எதிர்வரும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள்?

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 3492 மாணவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 1553 மாணவர்களுமாக மடு வலயத்திலிருந்து 376 மாணவர்களும் வவுனியா வடக்கு வலயத்திலிருந்து 175 மாணவர்களுமாக 5596 மாணவர்கள் இம்முறை வன்னிப் பிரந்தியத்தில் இருந்து இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்திருக்கின்றார்கள்.



வவுனியா மாவட்ட மேலதிகக் கல்விப் பணிப்பாளர் பசுபதி அரியரட்ணம்

இம் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய வசதிகள் தற்போது வன்னியில் காணப்படுகின்றனவா?

இம் மாணவர்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போல தோற்றுவதற்குரிய வசதிகள் வன்னி யில் இல்லை. பல பாடசாலைகள் இடம் பெயர்ந்துள்ளன. இதனால் அந்த பாட சாலைகளிலிருந்து தேவையான தள பாடங்களை ஆசன வசதிகளை செய்து கொடுக்க முடியாமல் பாடசாலை அதிபர்கள் இருக்கின்றார்கள். பரீட்சார்த்திகளுடைய ஆள் அடையாளத்தை நிருபிப்பதற்கு பாடசாலை பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் இந்த முறை தபால் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது தேசிய அடை யாள அட்டை மட்டுமே ஏற்றுக்கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பலர் தங்களுடைய வீடுகளை முற்றாக இழந்திருக்கின்றார்கள். எனவே பல பரீட்சார்த்திகளிடம் தேசிய அடையாள அட்டையோ அல்லது தபால் திணைக்களத்தின் அடையாள அட்டையோ இல்லாமல் இருக்கும். அதே போல் அரசாங்க ஆள்பதிவு திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படுகின்ற அடையாள அட்டைகளும் தற்பொழுது இருக்கின்ற தபால் போக்குவரத்து ஒழுங்கின்மை காரணமாக உரிய இடத்திற்கு சென்றடைந்திருக்க முடியாது. 2007ஆம் ஆண்டிலிருந்து அதற்கு முன்னைய காலத்தில் தேசிய அடையாள அட்டையோ அல்லது தபால் திணைக்கள அடையாள அட்டையோ பெற்றுக் கொள்ள முடியாத வர்கள் தங்கள் புகைப்படத்துடன் பாடசாலை பரீட்சார்த்திகளாக இருப்பின் பாடசாலை அதிபரினாலும் வலயக் கல்விப்பணிப்பாளரினாலும் உறுதிப்படுத்தப் பட்டால் அதையொரு ஆள் அடையாளமாக ஏற்றுக் கொள்ளவதற்கு பரீட்சைத் திணைக்களம் முடிவு செய் திருந்தது. அதே போல ஒரு தனிப்பட்ட பரீட்சார்த்தியாக இருந்தால் அவர் தன்னுடைய புகைப்படத்தை கிராம சேவையாளராலும் உதவி அரசாங்க அதிபராலும் உறுதிப்படுத்தினால் அந்த அடையாளத்தை ஏற்றுக் கொள்கின்ற ஒரு நடைமுறை இருந்தது. ஆனால் இவ்வருடம் இந்தப் பரீட்சார்த்திகளில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு இந்தப் புகைப்படங்களை ஏற்றுக் கொள்ள வேண்டாமென பரீட்சைத் திணைக்களம் அறிவுறுத்தியிருப்பதினால் அத்தகைய பரீட்சார்த்திகள் பெரிய சிரமத்தை எதிர் கொள்வார்கள். வன்னியின் தற்போதைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இம்முறையும் அவர்களுக்கு புகைப்படங்களை சமர்ப்பித்து பரீட்சை எழுதுவதற்கான ஒழுங்கை செய்ய வேண்டும் என்று அங்குள்ள பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள் அனைவரும் விரும்புகின்றார்கள்.

அரசும், அரசசார் பற்ற நிறுவனங்களும், ஐ.நா அமைப்புகளும் இம் மாணவர்களுக்கு எவ்வாறான உதவிகளை வழங்கி வருகின்றன?

க.பொ.த (சா/த) பரீட்சைக்கு கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 3492 மாணவர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 1553 மாணவர்களுமாக மடு வலயத்திலிருந்து 376 மாணவர்களும் வவுனியா வடக்கு வலயத்திலிருந்து 175 மாணவர்களுமாக 5596 மாணவர்கள் இம்முறை வன்னிப் பிரந்தியத்தில் பரீட்சைக்குத் தோற்று வதற்கு விண்ணப்பித்திருக்கின்றார்கள்

உதவிகளை செய்து வருவதில் UNICEF நிறுவனம் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. அவர்கள் இவ்வருடம் மாணவர்கள் இரவு நேரத்தில் தங்கிப் படிப்பதற்காக மின்சார வசதியில்லாத காரணத்தினால் மண்ணெண்ணெயை விநியோகிப்பதற்கான ஒழுங்குகளை செய்திருக்கின்றார்கள். அதே போல் உலக உணவு ஸ்தாபனமும் பரீட்சைக் காலத்தில் மாணவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்குவதில் ஊக்கமுடையவர்களாக இருக்கின்றார்கள். வன்னியில் இயங்குகின்ற சர்வதேச நிறுவனங்களும் மாணவர்களுடைய கல்வியிலும் ஆசிரியர்களுடைய நடவடிக்கைகளிலும் மிகவும் அனுசரணையாக இருப்பது ஒரு வரவேற்கத் தக்க செயலாகும்.

மீண்டும் வாழ்கோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS

USAID
FROM THE AMERICAN PEOPLE

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு அங்கவீனர்கள் பற்றி எடுத்துக் கூறும் வகையில் **'எங்களையும் வாழ விடுங்கள்'** குறுநாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

எங்களையும் வாழவிடுங்கள்



மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்சியில் சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படுகின்ற விஷேட தினங்களை சிறப்பிக்கும் வகையில் குறு நாடகங்கள் ஒலிபரப்பாகி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயம். கடந்த வார நிகழ்சியில் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச அங்கவீனர்கள் தினத்தை முன்னிட்டு எங்களையும் வாழ விடுங்கள் என்ற குறு நாடகம் ஒலிபரப்பானது.

அங்கவீனர்கள் தொடர்பாக சமூகத்தில் மக்கள் மத்தியில் காணப்படும் அபிப்பிராயங்கள் சில சந்தர்ப்பங்களில் அங்கவீனர்களை உள ரீதியாக பாதிக்கும் வகையில் அமைந்து விடுகிறது. இவர்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே சர்வதேச ரீதியாக இத்தினத்தை பிரகடனப்படுத்தியுள்ளார்கள். அங்கவீனர்கள் சாதாரணமானவர்களை விட ஏதோ ஒரு வகையில் உடல் அங்கங்களில் குறைபாடு உடையவர்களாக காணப்படுவார்கள். சிலருக்கு பிறப்பிலிருந்து உடல் குறைபாடு காணப்படும், சிலருக்கு சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக இடையில் உடல் அங்கங்களில் குறைபாடுகள் ஏற்படுகிறது. தற்போது உலகளாவிய ரீதியில் யுத்த சூழ்நிலைகள் காரணமாக அங்கவீனர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. அங்கவீனர்கள் என்ற தொனிப் பொருளில் இவர்கள் சமூகத்தில் இருந்து விலக்கி வைக்கப் பட வேண்டியவர்கள் அல்ல.

அங்கவீனர்களும் இந்த உலகத்தில் வாழ சகல உரிமையும் உடையவர்கள் தான். அவர்களுக்கான அங்கீகாரத்தை இந்த சமுதாயம் தான் வழங்க வேண்டும் காரணம் அவர்களும் இந்த சமூகத்தின் அங்கம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்கள் உடல் ரீதியாக மட்டுமே ஊனமானவர்கள், அவர்களை மனோரீதியாக ஊனமாக்கும் வகையில் மற்றவர்கள் நடந்துகொள்ளக் கூடாது. அவர்களை நோகடிக்கும் வகையில் வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தக் கூடாது.

நாடளாவிய ரீதியில் அவர்களைப் பாதுகாக்கும் வகையில் பல அமைப்புகள் காணப்படுகின்றன. அவர்களின் திறமைகளை வெளிக் கொணரும் செயற்பாடுகளும் இடம் பெற்ற வண்ணமே தான் உள்ளன. அங்கவீனர்களுக்காக சர்வதேச ரீதியாக ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் இடம் பெறுகின்றமை அனைவரும் அறிந்த விடயமே.

சமூகம் அங்கவீனர்களை தனிமைப்படுத்தாது அவர்களுக்கு தைரியம் கொடுத்து உரிய அங்கீகாரத்தை வழங்கி அரவணைப்பை வழங்கும் போது அவர்கள் தமது உடல் குறைபாடுகளை மறந்து மற்றவர்களுக்கு இணையாக வாழ முயற்சி செய்வார்கள். இவ்வாறான விழிப்புணர்வுகளை சமூகத்துக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கில் தான் சர்வதேச அங்கவீனர்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. எங்களையும் வாழ விடுங்கள் குறு நாடகத்தின் குறிக்கோளும் இதுவே தான்.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.